14.06.2023 CC. 261/2018 PW.1 திரு. சிதம்பரதாஸ்

**கடந்த 29.03.2021ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P. No. 3420/2023, dated 08.05.2023ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

வழக்கு சம்பவத்திற்கு பிறகு என்னை வெள்ளிச்சந்தை போலீசார் எப்போதாவது விசாரித்தார்களா என்றால் இல்லை. எனக்கு 2 பிள்ளைகள். என்னுடைய மூத்த மகன் தமிழநாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். 2 வது மகன் இராணுவத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான்.

2. வழக்கு சம்பவம் சம்மந்தமாக நான் எப்போது வெள்ளிச்சந்தை காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் - 28.01.2018. நான் கொடுத்த புகார் மனுவில் என்னை குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகன் அனித் அரிவாளால் வெட்ட வந்ததாக நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த வெட்டை நான் எனது இரண்டு கையால் தடுத்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் - ஆம் சொல்லியுள்ளேன்.

3. அதுபோல் அந்த வெட்டானது எனது வாயில் பட்டு 2 பற்கள் விழுந்து விட்டன என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லியுள்ளேன். புகார் மனுவில் நான் இரத்தக்காயத்துடன் காவல்நிலையத்திற்குச் சென்றேன் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் - சரிதான். காவல்நிலையத்தில் அதிகாரிகளின் ஆலோசனையின் படி ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு நான் சென்றேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான்.

4. சம்பவயிடத்தின் அருகில் நடேசன், சந்திரன், ஐயப்பன், நாகப்பன், வேலாயுதன் பிள்ளை, விக்னேஸ்வரன் ஆகியோரின் வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி நபர்களுக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. போலீசார் விசாரித்தார்கள். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 9 வரையுள்ளவர்கள் என்னைச் சார்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி சாட்சிகள் சூரப்பள்ளம், வெள்ளிச்சந்தையை சார்ந்தவர்கள் என்று சொன்னால்- சரிதான்.

5. சம்பவத்தின் போது எனக்கு வந்த இரத்தத்தைப் பொறுத்து சட்டை மற்றும் வேஷ்டியில் பட்டதா என்றால் பட்டது. 28.01.2018 ம் தேதி இத்ந வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் காயம் ஏற்பட்டதா என்றால்நான் ஏற்படுத்தவில்லை.

**கற்றறிந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி சம்பவத்தில் எதிர் சம்பவம் ஒன்று உள்ளது என்றும் அதில் அது தொடர்பாக மேற்படி காவல்நிலைய குற்ற எண் 8/2018 ஆக பதிவுச் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும் நாளது தேதி வரை அது குறித்து அறிக்கை எதுவும் சமர்பிக்கப்படவில்லை என்பது குறித்து தெரிவிக்கப்பட்டது குறித்து எதிர் எதிர் வழக்குகளில் அதன் உரிய நடைமுறையை பின்பற்றுவதற்காக இந்த குறுக்கு விசாரணை இத்துடன் முடிக்கப்படுகிறது.**

**மேற்படி சாட்சிக்கு செலவுத்தொகையானது தற்சமயம் கொடுக்கப்படவேண்டாம் என்றும் மேற்படி எதிர்வழக்கில் விசாரணை துவங்கும் நிலையில் மீண்டும் மேற்படி சாட்சியை விசாரிக்கும் தினத்தில் செலவுத்தொகையை தரவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிடுகிறது.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்